குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றம்

திண்டுக்கல்

STC.No: 2718/2022 , நாள் – 20.02.2026.

எதிரி தரப்பு சாட்சி 1 இன் சாட்சியம்

முதல் விசாரணை

| | | |
|---|---|---|
| பெயர் | – | பசுங்கிளி |
| தந்தை பெயர் | – | ராஜேந்திரன் |
| முகவரி | – | வினோபா நகர், ஒட்டன்சத்திரம் |
| வயது | – | 46 |
| தொழில் | – | விவசாயம் |

**புகார்தாரர் ஆஜர்.**

**சத்தியப்பிரமாணத்தின் மூலம் முதல் விசாரணை**

**எதிரி தரப்பு சாட்சியம்**

20.01.2021 அன்று என்னுடைய சம்மந்தி ஜோதி என்பவர் புகார்தாரர் சவேரியார் என்பவரிடம் இடம் வாங்குவது சம்மந்தமாக பார்ப்பதற்காக என்னை அழைத்ததால் நானும் சென்றேன். இடத்தை பார்த்துவிட்டு அதை பத்து நாளில் வாங்குவதாக சொல்லிவிட்டு என் சம்மந்தி சொன்னார். அவர் அட்வான்ஸ் தொகை கேட்டார். என் சம்மந்தியிடம் பணம் இல்லை அதனால் காசோலை எதாவது இருந்தால் கொடுங்கல் என கேட்டார். என் சம்மந்தியிடம் காசோலை இல்லை. என் மகளை என் காசேலை எடுத்து வரசொல்லி அதில் கையொப்பம் மட்டும் போட்டு நிரப்பாமல் சவேரியார் என்பவரிடம் கொடுத்தேன். 29.01.2021 அன்று பத்திரம் எழுதிவிட்டோம். பணம் கொடுத்து செட்டில் செய்துவிட்டார்கள். அந்த பத்திரத்தின் நகலை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேன்.

29.01.2021 தேதியிட்ட கிரைய ஆவணத்தில் இணைய சான்றிட்ட நகல் எ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் காசேலையை திருப்பி கேட்டேன். வீட்டிலிருக்கிறது மறுநாள் தருவதாக சொன்னார். நான் போன் நம்பரை வாங்கி வைத்து கொண்டேன். இரண்டு மூன்று நாள் கழித்து போன் செய்து கேட்டேன். காசோலையை சின்ன குழந்தை கிழித்து போட்டுவிட்டதாக சொன்னார் நானும் நம்பி விட்டேன். வங்கியிலிருந்து காசோலை பௌன்ஸ் ஆனதாக சொன்னார்கள் அதனால் நான் கடந்த 22.08.2022 அன்று வழக்கறிஞர் மூலம் அறிவிப்பை காசோலையை தவறாக பயன்படுத்தியாதாக சொல்லி சவேரிரியாருக்கு அனுப்பி வைத்தேன். மேற்படி அறிவிப்பை நான் நீதிமன்றத்தில்தாக்கல் செய்கிறேன். **22.08.2022 தேதியிட்ட சட்ட அறிவிப்பு மற்றும் அஞ்சலக ரசீது எ.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அதை பெற்றுக் கொண்டு பதில் அனுப்பவில்லை. கடந்த 01.09.2022 அன்று காசோலை திரும்பி விட்டதாக சட்ட அறிவிப்பு அனுப்பினார். அதனை மறுத்து கடந்த 06.09.2022 அன்று நான் பதில் அறிவிப்பு அனுப்பியுள்ளேன். அதனை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேன். **06.09.2022 தேதியிட்ட பதில் அறிவிப்பு மற்றும் அஞ்சலக ரசீது எ.த.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** எனது மகளுக்கு வீடு கட்டி கொடுத்ததாக சொல்லி காசோலை வழக்கு போட்டுள்ளார்கள். எனது மகள் வேறு ஒருவர் மூலம் தான் வீடு கட்டினார். வழக்கு காசேலையை நான் நிரப்பவில்லை. புகார்தாரர் சொன்னவாறு நான் தொகை ஏதும் பெறவில்லை செலுத்தவேண்டியதும் இல்லை. நான் பொறுப்புறுதியாக கொடுத்த காசோலையை தவறாக பயன்படுத்தி வழக்கு தாக்கல் செய்துள்ளார். அவருக்கும் எனக்கும் எந்த வரவு செலவும் இல்லை.

**புகார்தாரர் தரப்பு குறுக்கு விசாரணை–**

ஆவணங்களை பரீசீலனை செய்ய வேண்டி குறுக்கு விசாரணை வேறு ஒரு தேதிக்கு ஒத்தி வைக்க கோரப்பட்டு ஒத்திவைக்கப்படுகிறது.

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

PACKIARAJ Digitally signed by PACKIARAJ Date: 2026.02.20 17:32:31 +0530

Judicial Magistrate No.I
Dindigul.